
# நோயாளிக்குத தகவல்

## சிகிச்சை மருந்து:

# இதய நோய்கள்

### கொழுப்பு குறைப்பு மருந்துகள்

- ☐ ஸ்டாட்டின்ஸ்
- ☐ ஃபைப்ரேட்ஸ்
- ☐ ஃபேட் பைண்டிங் ஏஜண்ட்ஸ்
- ☐ நிக்கோட்டினிக் ஆசிட் குரூப்



Medicine To Treat: **Cardiac Diseases**

**Lipid-Lowering Medicines**

## உங்கள் மருந்தை பற்றி

| மருந்துப் பிரிவு | பிரிவில் உள்ள மருந்து மாதிரிகள் |
|---|---|
| ஸ்டாட்டின்ஸ் | • லோவாஸ்டாட்டின்<br>• பிரவாஸ்டாட்டின் (பிரவாகோல்)<br>• சிம்வாஸ்டாட்டின் (ஸோகோர்)<br>• அட்டோர்வாஸ்டாட்டின் (லிப்பிடோர்)<br>• ஃபுளுவாஸ்டாட்டின் (லெஸ்கோல்) |
| ஃபைப்ரேட்ஸ் | • ஜெம்ஃபைப்ரோஸில் (லோபிட்)<br>• பெஸாஃபைப்ரேட் (பெஸாலிப்,<br>• பெஸாலிப் ரிடார்ட்)<br>• சிப்ரோஃபைப்ரேட் (மோடாலிம்)<br>• குளோஃபைப்ரேட் (அட்ரோமிட்-S)<br>ஃபெனோஃபைப்ரேட் (லிபான்தைல், லிபான்தைல்மைக்ரோ) |
| ஃபேட் பைண்டிங் ஏஜண்ட்ஸ் | • கொலஸ்ட்டைராமின் (குவெஸ்ட்ரான் லைட்) |
| நிக்கோட்டினிக் ஆசிட் குரூப் | • நிக்கோட்டினிக் ஆசிட்<br>• ஆசிபிமோக்ஸ் (ஆல்பட்டாம்) |

### லிப்பிட் குறைப்பு மருந்துகள் எதற்குப் பயன்படுத்தப்படுகின்றன?

இந்த பிரிவைச் சேர்ந்த மருந்துகள் இரத்தக் கொழுப்பு அம்சங்களை மேம்படுத்த உதவுகின்றன. மாரடைப்பு, பக்கவாத அபாயங்களைக் குறைப்பதுடன், இரத்த ஓட்டத்தை மேம்படுத்த செய்யப்படும் பலூன் ஆன்ஜியோபிளாஸ்ட்டி அல்லது இதய அறுவை சிகிச்சைகளையும் குறைக்கும். உங்கள் ஆரோக்கியம் மற்றும் கொழுப்பு அளவைப் பொறுத்து,சிகிச்சையை எப்போது தொடங்கலாம் என்பதை உங்கள் மருத்துவர் முடிவு செய்வார்.

இந்த மருந்துகள், ' கெட்ட கொலஸ்திரால்' (அடர்த்தி குறைந்த லிப்போபுரோட்டீன் அல்லது LDL-கொலஸ்திரால்) மற்றும் 'கொழுப்பு' (டிரைகிளிஸரைட்) ஆகியவற்றைக் குறைப்பதன் மூலமும், நல்ல கொலஸ்திராலின் (அடர்த்தி மிகுந்த லிப்போபுரோட்டீன் அல்லது HDL-கொலஸ்திரால்) அளவை உயர்த்துவதன் மூலமும் உங்கள் இரத்த கொலஸ்திரால்-கொழுப்பு அளவைக் குறைக்கின்றன. அதிக கொலஸ்திரால் அளவு இதயத் தசைகளுக்கு இரத்தம் கொண்டு செல்லும் தமனி குழாய் நாளங்களைப் படிப்படியாக அடைத்து இதய நோயை ஏற்படுத்தும். ஆத்ரோஸ்கலரோசிஸ் எனப்படும் இந்த முறை, இறுதியில் மார்பு வலி (எஞ்ஜீனா), மாரடைப்பு அல்லது பக்கவாதத்தை ஏற்படுத்தும். இறுதியாக, இந்த மருந்துகள் வாழ்நாளை நீட்டிக்கவும் உதவும்.

## இந்த மருந்தை நான் எப்படி உட்கொள்வது?

கொலஸ்ட்டைராமின் தவிர்த்த இப்பிரிவிலுள்ள மற்ற மருந்துகள் மாத்திரைகள் அல்லது உறைவில்லைகளாகக் கிடைக்கின்றன. அவற்றை தண்ணீருடன் வாய்வழியாக உட்கொள்ளலாம். அன்புகூர்ந்து ஒட்டுவில்லையில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளைப் பின்பற்றுங்கள். ஸ்டாட்டின் மருந்துகளை பொதுவாக இரவு உணவுக்குப் பிறகு உட்கொள்வது நல்லது.

கொழுப்பைக் குறைக்கும் ஃபேட் பைண்டிங் ஏஜண்ட்ஸ், தூள் அடைக்கப்பட்ட ஓர் உறையில் கிடைக்கும். அதை தண்ணீருடன் சேர்த்து உட்கொள்ள வேண்டும். அன்புகூர்ந்து ஒட்டுவில்லையில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளைப் பின்பற்றுங்கள். இந்த மருந்தை உட்கொண்ட 4 மணி நேரத்திற்குப் பிறகு அல்லது குறைந்தபட்சம் ஒரு மணி நேரத்திற்கு முன்பு மற்ற மருந்துகளை உட்கொள்ள வேண்டும். இப்படிச் செய்வதால் மற்ற மருந்துகளின் கிரகிப்பு பாதிக்கப்படாது.

மருந்துகளை நிறுத்தும்படி உங்கள் மருத்துவர் சொல்லும்வரை நீங்கள் இவற்றை தொடர்ந்து உட்கொள்ள வேண்டும். மருந்துகளை நீங்கள் நிறுத்தி விட்டால் உங்கள் கொலஸ்திரால் அளவு மீண்டும் அதிகரிக்கலாம். நீங்கள் பயன்படுத்தக்கூடிய மற்ற மருந்துகளின் அளவை நீங்கள் சரிசெய்யும் அவசியத்திற்காக, இந்த மருந்தை நிறுத்திவைக்கும் திட்டம் இருந்தால் உங்கள் மருத்துவரிடம் அன்புகூர்ந்து தெரிவியுங்கள்.

## ஒருவேளை மருந்தை உட்கொள்ள மறந்துவிட்டால் என்ன செய்ய வேண்டும்?

வழக்கமான நேரத்தை நீங்கள் மறந்துவிட்டால், அதற்காக கூடுதல் மருந்து

உட்கொள்ளாதீர்கள். அடுத்த வேளைக்குரிய வழக்கமான அளவை உட்கொண்டால் போதும்.

## இம்மருந்தின் சாத்தியமான பக்கவிளைவுகள் யாவை?

எல்லா மருந்துகளும் சாத்தியமான பக்கவிளைவுகளை ஏற்படக்கூடியவை. இந்த மருந்துகளை பயன்படுத்துவதால் ஏற்படக்கூடிய பொதுப்படையான விளைவுகள் கீழ்க்கண்ட அட்டவணையில் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.

| மருந்துப் பிரிவு | பக்கவிளைவுகள் |
|---|---|
| ஸ்டாட்டின்ஸ் | • ஜீரணக் கோளாறுகள், எ.கா. வயிற்றுவலி,<br>• மலச்சிக்கல், வயிற்றுப் போக்கு<br>• களைப்பு<br>• தலைவலி, தசைவலி |
| ஃபைப்ரேட்ஸ் | • குமட்டல், வாந்தி<br>• ஜீரணக் கோளாறுகள், எ.கா. நெஞ்சு எரிச்சல், வயிற்றுப் போக்கு<br>• தோல் சொறி<br>• தலைவலி, தசைவலி |
| ஃபேட் பைண்டிங் ஏஜண்ட்ஸ் | • அஜீரண அறிகுறிகள், எ.கா. மலச்சிக்கல் வயிற்றுப் போக்கு<br>• குமட்டல், வாந்தி |
| நிக்கோட்டினிக் ஆசிட் குரூப் | • தோல் சிவத்தல் அல்லது சொறி, சிரங்கு<br>• தலைவலி<br>• ஜீரணக் கோளாறுகள், எ.கா. நெஞ்சு எரிச்சல், வயிற்றுப் போக்கு |

இந்த மருந்துகளை உட்கொண்ட பிறகு மேற்குறிப்பிட்ட பக்கவிளைவுகள் எதுவும் உங்களுக்கு ஏற்பட்டால் அல்லது உடல் நலக்குறைவு ஏற்பட்டால் அன்புகூர்ந்து உடனடியாக உங்கள் மருத்துவரிடம் தெரிவியுங்கள்.

## எத்தகைய முன்னெச்சரிக்கை நடவடிக்கையை நான் எடுக்க வேண்டும்?

நீங்கள் எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை அட்டவணை உணர்த்துகிறது.

| உங்களுக்கு இவை இருந்தால் | நீங்கள் உட்கொள்ளக் கூடாதவை |
|---|---|
| • மருந்துக் கூறுகளினால் ஒவ்வாமை | ஸ்டாட்டின்ஸ், ஃபைப்ரேட்ஸ், ஃபேட் பைண்டிங் ஏஜண்ட்ஸ் |
| • தீவிர கல்லீரல் நோய் அறிகுறி | ஸ்டாட்டின்ஸ், ஃபைப்ரேட்ஸ் |
| • கர்ப்பம் அல்லது தாய்ப்பால் கொடுத்தல் | ஸ்டாட்டின்ஸ், ஃபைப்ரேட்ஸ், ஃபேட் பைண்டிங் ஏஜண்ட்ஸ், நிக்கோட்டினிக் ஆசிட் குரூப் |
| • பித்தநீர் சுரப்பி முறையில் முழுத் தடை அறிகுறி | ஃபேட் பைண்டிங் ஏஜண்ட்ஸ் |

வழக்கமாக நீங்கள் உட்கொள்ளும் மற்ற எல்லா மருந்துகளைப் பற்றியும் மருத்துவரிடம் அன்புகூர்ந்து தெரிவியுங்கள். சில மருந்துகள் (வார்ஃபரின் போன்றவை) இந்த மருந்துப் பிரிவுடன் கலக்கும்போது அவற்றின் சக்தியை பாதிக்கும் அல்லது பக்கவிளைவு அபாயத்தை அதிகமாக்கும்.

## மருந்துகளை நான் சேமித்து வைப்பது எப்படி?

உங்கள் மருந்தை அதன் அசல் கலத்தில் அல்லது சிப்பத்தில் இறுக்கமாக மூடி அல்லது முத்திரையிட்டு வைத்திருக்க வேண்டும். மாத்திரைகளை ஒரு குளிர்ச்சியான, உலர்ந்த இடத்தில் சேமித்து வையுங்கள்.

SingHealth
Ministry Of Health
National Healthcare Group
Printed in 2002